

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஏ.ஆர். ராஜா ஏற்பாட்டில் கோனேரி ராஜபுரம் மற்றும் கோமல் ஆகிய ஊராட்சிகளில் இருந்து அ.தி.மு.க.வை சேர்த்த 25 க்கும் மேற்பட்டவர்கள் அக்கட்சியிலிருந்து விலகி மயிலாடுதுறை மாவட்ட செயலாளரும், பூம்புகார் சட்ட மற்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் குத்தாலம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஏ.ஆர்.ராஜா மற்றும் ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில்

# ரூ.9 கோடியில் - சிறப்பு உயர் திறன் மையம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, மார்ச் 5 -

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.3.2026) ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் 9.00 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள, விளையாட்டு போட்டி மற்றும் பயிற்சியின்போது காயப்படுகின்ற வீரர்களை முழுவதுமாக சரிசெய்து முன்பைவிட அதிக வலிமை மற்றும் மேம்பட்ட திறனுடன் மீண்டும் விளையாட்டு களத்திற்கு செல்வதற்கான விளையாட்டு மருத்துவம் மற்றும் நுண்துளை மூட்டு அறுவை சிகிச்சை துறையின் சிறப்பு உயர் திறன் மையத்தை (Centre of Excellence) திறந்து வைத்தார்.

ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசின் பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில் நுண்துளை மூட்டு அறுவை சிகிச்சை மற்றும் விளையாட்டு காயம் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு, பல்வேறு நுண்துளை அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த பிரிவில் ஆண்டிற்கு சராசரியாக 3,000 விளையாட்டு வீர்கள் வரை அவர்களுக்கு ஏற்பட்ட காயங்களை பரிசோதித்து, அவற்றில் சுமார் 300 நுண்துளை அறுவை சிகிச்சைகளும், மற்றவர்களுக்கு புனர்வாழ்வு ஆலோசனைகளும் வழங்கி சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

விளையாட்டால் ஏற்படும் காயங்களுக்கான குருத்தணுக்கள் சிகிச்சை, PRP (Platelet Rich Plasma) மற்றும் Intra articular Injection அளிக்கப்பட்டு வருகிறது. அறுவை சிகிச்சைக்கு முன்னும், அறுவை சிகிச்சைக்குப் பின்னும் தகுந்த மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது.

நுண்துளை மூட்டு அறுவை சிகிச்சை மற்றும் விளையாட்டு காய பிரிவினை சர்வதேச தரத்திற்கு இணையாக உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்தில் CoESMAS (Centre of Excellence Sports Medicine and Arthroscopy) என்ற சிறப்பு உயர் திறன் மையமாக தரம் உயர்த்தப் பட்டுள்ளது.

இந்த மையத்தில் கிராமப்புற, நகர்ப்புற, மற்றும் தேசிய அளவிலான விளையாட்டு வீரர்களுக்கு ஏற்படும் காயங்களுக்கு சர்வதேசதரத்திற்கு இணையாக உடலியங்கியல் உடற்பயிற்சி, விளையாட்டு உளவியல், விளையாட்டு ஊட்டச்சத்து, உயர் செயல்திறன் பயிற்சி உள்ளிட்ட பல்வேறு அதிநவீன அறிவியல் முறைகளை கொண்டு 3D Gait Lab with IR cameras, Force Plat போன்ற பல்வேறு கருவிகளை உபயோகப்படுத்தி விளையாட்டு அறிவியல் ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது. விளையாட்டு அறிவியல் ஆய்வகம் மூலம் விளையாட்டு வீரர்களின் காயத்தை முழுவதுமாக பரிசோதித்து நுண்துளை மூட்டு அறுவை சிகிச்சை செய்வதற்கு சர்வதேச தரம் கொண்ட OT Highend table, Multipara Monitor போன்ற கருவிகளை பயன்படுத்தி காயப்பட்ட வீரர்களை முழுவதுமாக சரிசெய்து முன்பைவிட அதிக வலிமையுடன் மற்றும் மேம்பட்ட திறனுடன் மீண்டும் விளையாட்டு களத்திற்கு செல்வதற்கு இந்த மையம் சிறப்பு உயர்திறன் மையமாக (Centre of Excellence) மேம்படுத்தப்பட்டுள்ளது.

இம்மையத்தில், தலா ஒரு பேராசிரியர், உதவி பேராசிரியர், மருத்துவ அலுவலர், உடலியங்கியல் உடற்பயிற்சியாளர், உயிரியக்கவியல் நிபுணர், விளையாட்டு உயிரி எந்திரவியல் நிபுணர் மற்றும் 2 உடற்பயிற்சி பயிற்சியாளர் உள்ளிட்ட பல்வேறு பணியிடங்கள் உருவாக்கப்பட்டு, அவர்கள் மூலம் பல்வேறு விளையாட்டு பிரிவுகளில் ஏற்படும் தோள்பட்டை தசைநார் கிழிதல், முழங்கை மூட்டு தசைநார் கிழிதல், மணிக்கட்டு தசைநார் கிழிதல், கணுக்கால தசைநார் கிழிதல், சுளுக்கு போன்ற அனைத்து காயங்களையும் பரிசோதித்து சரி செய்யப்படுகிறது.

விளையாட்டு வீரர்களுக்கு விளையாடுவதற்கு முன்னும், பின்னுமான தகுதி பரிசோதனை (Iso Kinetic, High Performance Training, CPET, Vertec device, Response Timer, Timing Gates) மூலம் கண்டறிய சர்வதேச தரத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இம்மையத்தால் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் அமைந்துள்ள SDAT விளையாட்டு வீரர்கள், கிரா மப்புற, நகர்ப்புற, மற்றும் தேசிய அளவிலான தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள் பயன்பெற்று உடனடியாக அவர்கள் மீண்டும் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்று சாதனைகளை நிகழ்த்த வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது.

### ரூ.6.90கோடி மதிப்பீட்டில்

# கரூரில் மாவட்ட மைய நூலக கட்டிடம்!

## செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

கரூர், மார்ச். 5 -

கரூர் திருவள்ளுவர் மைதானத்தில் ரூ.6 கோடியே 90 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய மாவட்ட மைய நூலக கட்டடத்தை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி திறந்து வைத்தார்.

கரூர் மாநகராட்சி திருவள்ளுவர் மைதானம் மேற்கு பகுதியில், கரூர் மாவட்ட மைய நூலகத்திற்கு, ரூபாய் 6.90 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டிடம் திறப்பு விழா கரூர் மாவட்ட கலெக்டர் கு. ரவிக்குமார் தலைமையில் நடைபெற்றது. கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி புதிய நூலகத்தை திறந்து வைத்து பார்வையிட்டார்.

வாசகர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளுடன், 17100 சதுரடி பரப்பளவில்கட்டப்பட்டிருக்கும் இந்த நூலகத்திற்கு மூன்று தளங்கள் உள்ளன. தரைத் தளத்தில் பத்திரிக்கைகள் மற்றும் செய்தித்தாள்கள் வாசிக்கும் அறை, குழந்தைகள் பிரிவு மற்றும் முதியவர்கள் பிரிவு, முதல் தளத்தில் கணினி பிரிவுக்கான இடம், புத்தகங்களுக்கான அறை, நகலெடுக்கும் வசதி, வைஃபை (WiFi) வசதி மற்றும் பதிவறை, இரண்டாம் தளத்தில், குறிப்புதவி பிரிவு, பாடநூல் பிரிவு, நூலகர் அறை மற்றும் கூட்ட அரங்கம் உள்ளது..

அனைத்து தளங்களிலும், பெண்கள், ஆண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு தனித்தனியே கழிப்பறை வசதிகள், சுத்திக ரிக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் லிப்ட் வசதி உள்ளது.

தொடர்ந்து நடைபெற்ற விழாவில் கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி பேசியதாவது:

கரூர் மாவட்ட மைய நூலகத்திற்கான கட்டிடம் இட நெருக்கடியில் இருந்தது. போட்டி தேர்வுக்கு தயாராகி வரும் மாணாக்கர்களுக்கு போதிய இடவசதி இல்லை. இது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றதும், அனுமதி வழங்கி, நிதியையும் ஒதுக்கீடு செய்தார்கள். ரூ.6.90 கோடி மதிப்பில் கரூர் மாவட்ட மைய நூலக கட்டிடம் இன்று திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

**தேர்தல் களத்தில் தோற்றவர்கள் செய்த செயல்**

சில பேர் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவும், தேர்தல் களத்தில் மக்கள் மனதில் இடம் பெற முடியாதவர்கள் நீதிமன்றத்திற்கு சென்று தடையாணை பெற்றனர். மாணாக்கர்கள் படிக்கின்ற ஒரு நூலகம் என்றுகூட பார்க்காமல், அந்த கவலை கூட இல்லாமல் செய்தனர். ஆனால் திராவிடமாடல் அரசு சட்டப் போராட்டம் நடத்தி, அதில் வென்று தற்போது பொதுமக்கள் பயன்பாட்டிற்கு நூலக கட்டிடம் திறந்து வைக்கப் பட்டிருக்கிறது. போட்டித் தேர்வுக்கு பயில்கின்றவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டு இருக்கின்றன.

மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியில், கரூர் மாவட்டத்தில் மட்டும் இதுவரை ரூ.20.70 கோடி மதிப்பிலான புதிய நூலக கட்டிடங்கள் அமைக்கப் பட்டுள்ளன. ரூ. 20 கோடியே 70 லட்சம் மதிப்பில் 39 கிராமப்புற நூலகங்களுக்கு சொந்த கட்டடம் கட்டடங்கள், அரவக்குறிச்சியில் 64 ஆண்டுகளாக வாடகை கட்டடத்தில் இயங்கி வந்த நூலகத்திற்கு தற்போது சொந்த கட்டடம் என கட்டப்பட்டு இருக்கிறது. வாசகர் வட்டம், கல்வியாளர்கள், தீபம் சங்கர் போன்றோரிடம் என்ன தேவை என்று கேட்டு அவர்கள் வழங்கும் ஆலோசனையை ஏற்று இது போன்றதிட்டங்களை செயல்படுத்தி வருகிறோம்.

கரூர் மாநகராட்சியில் மண் சாலைகளே இல்லை என்கிற அளவில், தார் மற்றும் சிமெண்ட் சாலைகளாக மாற்றப்பட்டு இருக்கின்றன. முன்பு எல்லாம் 10 முதல் 15 நாட்கள் வரை குடிநீர் விநியோகம் என்ற நிலை தற்போது மாற்றப் பட்டு இருக்கிறது. நான்கு நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. மேலும் புதிய காவிரி குடிநீர் திட்டம் நிறைவு பெறும்போது தினமும் குடிநீர் வழங்குகின்ற நிலையை ஏற்படுத்துவோம். அனைத்து பகுதிகளுக்கும் பாதாள சாக்கடை அமைக்க டெண்டர் கோரப்பட்டு இருக்கிறது இந்தபணிகள்நிறைவேறும் போது மாநகராட்சி முழுவதும் பாதாள சாக்கடை அமைந்தது என்ற நிலை ஏற்படும் கரூர் மாவட்ட மக்கள் இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து முதல்வர் அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு செந்தில் பாலாஜி பேசினார்.


மாவட்ட நூலக அலுவலர் சிவக்குமார், மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், ஆணையர் சுதா, துணைமேயர் தாரணி சரவணன், மண்டல குழு தலைவர்கள் எஸ்பி. கனகராஜ், அன்பரசன், சக்திவேல், பகுதி செயலாளர்கள் விஜிஎஸ்.குமார், ஜோதிபாசு மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



மார்ச் 1 கழகத் தலைவர் , தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப் பட்டணம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் வேட்டி சேலை மற்றும் அன்னதானத்தை தெற்கு ஒன்றிய செயலாளர் ஏ. விஜயகுமார் பொதுமக்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய நிர்வாகிகள் , சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தகைசால் தமிழரும் – தமிழ்நாடு முதல்வரும்!

**‘கணையாழி’ தலையங்கம்!**




அரசியல் என்பது
அதிகார வெறிக்கான பாதை இல்லை!
மக்களுக்குத் தொண்டு செய்யும்
மகத்தான வாய்ப்பு என்று
நாம் வாழும் காலத்திலும்
வாழ்ந்து காட்டியிருக்கிறார்
தோழர் நல்லகண்ணு!

ஆடம்பர வாழ்க்கை இல்லை
ஆளுமைச் சண்டைகள் இல்லை
போராட்டக் களம் வளர்த்த
இளமையும் முதிர்ச்சியுமாக
நம் காலத்திய
அதிசயத் தலைவர்
தோழர் நல்லகண்ணு!

சிறை வளர்த்த சிந்தனைகள்.
மாற்றுக் கட்சியினரும்
மதிக்கும் எளிமை, நேர்மை,
அநீதிக்கு எதிரான போராட்டம் என்று
ஆளுமைப் பண்பால் வளர்ந்தவர்!

மனக்குறை இல்லா
மாண்புமிகு வாழ்க்கை ஒன்றை
வாழ முடியும் என்பதற்கு
வரலாறு ஆகியிருக்கிறார்!

குறைந்த கூலியில்
நீண்ட நேர உழைப்பு எனும்
தொழிலாளர் உரிமைச் சுரண்டலைக்
கண்டித்துப் போராடியவர்!

தனக்குச் சொந்தமாக
வீடு ஒன்று வேண்டாதவர்
வீடு இல்லா மக்களுக்காக
வீதியில் போராடியவர்!

நதி நீர் இணைப்புக்குப்
பாலமாய் நின்றவர்!
சுற்றுச் சூழலைக் காக்கும்
சமூகச் சூழலை உருவாக்கியவர்!

படிக்கவும் பேசவும் மட்டுமின்றிப்
பின்பற்ற வேண்டிய
வாழ்க்கையின் பாடமாக
வாழ்ந்து காட்டியிருக்கிறார்!

தனக்குக் கிடைத்த
கோடி ரூபாய் நிதியை மட்டுமல்ல
உடலையும் தானமாக்கி
மாணவர்களோடு
மக்களுக்கும் பாடமாகி இருக்கிறார்!

தோழர் நல்லகண்ணு
இலக்கு தெரிந்தவர்
வழி தெரிந்தவர்
வழி காட்டியவர்!

செயலில் வாழ்ந்த
தலைவர்கள் கொண்டாடும்
தோழமைக்கு உரியவர்!

பொருளுக்கு அலையும்
உலகில் அரசியலுக்கு
மெய்ப்பொருள் ஆனவர்!

மக்கள் மனமெனும்
சிகரங்களைத் தொட
பிரச்சினைகள் எனும்
பள்ளத்தாக்குகளில்
பக்குவம் பெற்றவர்!

தமிழ் உணர்வை
மதித்துப் போற்றியவர்!

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது
அறிஞர் அண்ணா அறிவித்து
அதன்பின்
முத்தமிழ் அறிஞர் கலைஞரால் தொடங்கப்பட்ட
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனப்
பேராசிரியர்களும் பணியாளர்களும்
ஓய்வூதியமின்றி
உளைச்சலில் இருந்தபோது
முதல்வர் கலைஞரின்
கவனத்திற்கு எடுத்துச் சென்றவர்!

ஒரு குரலில்
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் பக்கம்
தலைமைச் செயலகத்தையும்
தமிழ் உலகையும் திரும்பச் செய்தவர்!
எப்படிச் செய்ய வேண்டும் என்று
பாடம் நடத்தாமல்
என்ன செய்ய வேண்டும் என்று
சிந்தித்துக் கொண்டிருந்தவர்!

அங்கீகாரத்திற்கு அலையாமல்
தனக்குத் தான்
நேர்மையாக இருந்தவரைத்
தலைமைப் பண்பு தேடி வந்தது!

தடைகளைக் கண்டுபிடித்து
முடக்கிப் போடாமல்
இலக்குகளைச் சென்றடையும்
வாய்ப்புகள் நோக்கிய
தீர்வுகளைக் கூறியவர்!

விளம்பர வேட்டையும்
வேட்கையும் இல்லாதவர்!

அவரது மதிப்பு
பதவிகளால்!
அளந்தறியப்பட முடியாதது

மக்கள் மனதில் பதிந்த
அவரது
கருத்துப் பதிவம்!
கணக்கிட முடியாதது

எதை நம்புகிறேன் என்று
மக்களுக்கு எதிர்காலத்தைக் காட்டியவர்!

அரிய பண்புகளின்
கொள்கலனாக விளங்கிய
தோழர் நல்லகண்ணு அவர்களை
அவர்
வாழும் காலத்திலேயே
தகைசால் தமிழர் என்று
அடையாளப்படுத்தியவர்
தமிழ்நாடு முதல்வர்!

பெரியாரைப் போல
எந்தப் பதவியிலும் இருந்திராத போதும்
அவர் மறைந்ததும்
அரசு மரியாதைக்கு
ஆணையிட்டதிலும்
உடல் அருகே நின்று
வீர வணக்கம்! வீர வணக்கம்!
தகைசால் தமிழருக்கு
வீர வணக்கம்! என்று
கை உயர்த்திக்
குரல் உயர்த்தியதிலும்
முதல்வரின் முகத்தில்
வெளிப்பட்டன்
தகைசால் தமிழரின்
மாண்பும்
தமிழ்நாடு முதல்வரின்
பெருமிதமும்!
கூடவே
நினைவுக்கு வந்தது
முதல்வரின் பெயரும்!



அன்புடன்
**ம.ரா.**

நன்றி: **கணையாழி**
மார்ச் 2026